**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 59/2025**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **பிரியங்கா** | **Caste** | : |
| **Husband's Name** | : பால்பாண்டியராஜ் | **Calling** | : **SSM மில்லில் வேலை** |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : **திண்டுக்கல்** | **Age** | : **34** |
| | | **Dated** | : **09.07.2025** |

**09.07.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திருமதி.**பிரியங்கா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கலில் குடியிருந்து SSM மில்லில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் சம்பவத்தில் இறந்த பால்பாண்டியராஜ் எனது கணவர். அவர் புவனேஷ்வரி மில்லில் வேலை செய்து வந்தார். கடந்த 18.08.2024 ம் தேதி எனது கணவருக்கு விடுமுறை நாள். அன்றைய தினம் நான்வேலைக்கு சென்றுவிட்டேன். மாலை 06.00 மணிக்கு நான் வீட்டிற்கு வந்து போன் செய்தேன். அப்போது அவர் பஜாரில் இருப்பதாகவும், மகன் சிக்கன் கேட்டதால் அதை வாங்கிக்கொண்டு

வருவதாக சொன்னார். அவர் என்னையும் அழைத்தார். நான் வரவில்லை என்று சொல்லிவிட்டேன். அதன்பின்னார் சுமார் அரை மணி நேரம் கழித்து நான் அவருக்கு போன் செய்தேன். அவர் போனை எடுக்கவில்லை. சுமார் 07.00 மணிக்கு வினோத்குமார் போன் செய்து எனது கணவருக்கு காட்டு ஆஸ்பத்திரி MLA அலுவலகம் முன்பு விபத்து நடந்ததாக தகவல் சொன்னார். பின் தகவல் கேள்விப்பட்டு நான், முத்துப்பாண்டி, சுப்பிரமணி, ஆனந்தபாபு, கணேசன் ஆகியோர்கள் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று பார்த்தோம். எனது கணவருக்கு தலையில் அடிபட்டு காது, மூக்கு ஆகிய இடங்களில் ரத்தம் வந்தது. வினோத்குமாரிடம் சம்பவம் பற்றி கேட்டபோது எனது கணவர் MLA அலுவலகம் முன்பு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த பையன் எனது கணவர் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார். பின்னர்மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு போலிசார் வந்து விசாரிக்க நடந்ததை கூறி நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின் எனது கணவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார்.போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.09 15:50:35 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 59/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **வினோத்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | மலைச்சாமி | **Calling** | : | **பேக்கரியில் வேலை** |
| **Village** | : | **பாலகிருஷ்ணபுரம்** | **Religion** | : | |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **26** |
| | | | **Dated** | : | **09.07.2025** |

**09.07.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 திரு.**வினோத்குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் பாலகிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் சம்பவத்தில் இறந்த பால்பாண்டியராஜ் என்பவரை தெரியும். கடந்த 18.08.2024 ம் தேதி எனக்கு

ஞாயிற்றுக்கிழமை என்பதால் எனக்கு விடுமுறை நாள். அன்று மாலை 06.00 மணிக்கு பாண்டியன் நகர் MLA அலுவலகம் முன்பு உள்ள பழக்கடையில் நின்று கொண்டிருந்தேன். அப்போது பால்பாண்டியராஜ் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சாலையின் இட புறமாக splender இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்.அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் வேகமாகவந்த ஆஜர் எதிரி பால்பாண்டியராஜ் வந்த இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டு நிற்காமல் வேகமாக சென்றுவிட்டார். உடனே பால்பாண்டியராஜ் கீழே விழுந்துவிட்டார். உடனே நான் பால்பாண்டியராஜை பார்த்தேன். அவருக்கு பின் தலையில் காயம் பட்டிருந்தது. காதிலும், மூக்கிலும் வந்தது. உடலில் சிறாய்ப்பு காயம் பட்டது. உடனே 108 ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். இந்த தகவலை பால்பாண்டிராஜீன் மனைவி பிரியங்காவிடம் சொன்னேன். பின் அவர் முத்துப்பாண்டி, சுப்பிரமணி, கணேசன் ஆகியோர்களை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து பார்த்தார். பின்னர் பால்பாண்டியராஜை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அவர்சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை</u>

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.09 15:50:43 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 59/2025**

**Prosecution Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **முத்துப்பாண்டி** | **Caste** | : |
| **Father's Name** | : ராமராஜ் | **Calling** | : **விவசாயம்** |
| **Village** | : **கம்பிளியம்பட்டி** | **Religion** | : |
| **Taluk** | : **திண்டுக்கல்** | **Age** | : **40** |
| | | **Dated** | : **09.07.2025** |

**09.07.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–3 திரு. **முத்துப்பாண்டி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

1. நான் திண்டுக்கல் கம்பிளியம்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் சம்பவத்தில் இறந்த பால்பாண்டியராஜ் எனது மச்சினன். கடந்த 18.08.2024 ம் தேதி எனக்கு வினோத்குமார் எனக்கு போன் செய்து எனது மச்சினன் திண்டுக்கல் பாண்டியன் நகர் MLA அலுவலகம் முன்பு பால்பாண்டியராஜ் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி

சாலையின் இட புறமாக splender இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, அப்போது வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் திரும்பியவர் வேகமாகவந்து பால்பாண்டியராஜ் வந்த இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டு நிற்காமல் வேகமாக சென்றுவிட்டதாக தகவல் சொன்னார். தகவல் கேள்விப்பட்டு நான் கணேசன், பிரியங்கா ஆகியோர் திண்டுக்கல் அரசு மருத்துவமனை வந்து பார்த்தோம். அவருக்கு பின் தலையில் காயம் பட்டிருந்தது. காதிலும், மூக்கிலும் வந்தது. உடலில் சிறாய்ப்பு காயம் பட்டது. பின்னர் பால்பாண்டியராஜை மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை</u>

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.09 15:50:51 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 59/2025**

**Prosecution Witness : 4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **சுப்பிரமணி** | **Caste** | : |
| **Father's Name** | : வேலுச்சாமி | **Calling** | : **கோவில் பணி** |
| **Village** | : **சுக்காம்பட்டி** | **Religion** | : |
| **Taluk** | : **திண்டுக்கல்** | **Age** | : **42** |
| | | **Dated** | : **09.07.2025** |

**09.07.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–5 திரு.**சுப்பிரமணி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் சுக்காம்பட்டியில் குடியிருந்து கோவிலில் வேலை செய்து வருகிறேன்.இவ்வழக்கில் சம்பவத்தில் இறந்த பால்பாண்டியராஜ் எனது மனைவியின் தம்பி. கடந்த 18.08.2024 ம் தேதி எனக்கு பிரியங்கா எனக்கு போன் செய்து பால்பாண்டிராசுக்கு விபத்து நடந்ததாக தகவல் சொன்னார். தகவல்கேள்விப்பட்டு நான் , பிரியங்கா, முத்துப்பாண்டி,

கணேசன் ஆகியோர்கள் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று பார்த்தோம். சம்பவம் பற்றி வினோத்குமாரிடம் கேட்டபோது திண்டுக்கல் பாண்டியன் நகர் MLA அலுவலகம் முன்பு பால்பாண்டியராஜ் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சாலையின் இட புறமாக splender இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் வேகமாகவந்து பால்பாண்டியராஜ் வந்த இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டு நிற்காமல் வேகமாக சென்றுவிட்டதாக தகவல் சொன்னார். பால்பாண்டியராஜீக்கு பின்தலையில்காயம் பட்டிருந்தது. காதிலும், மூக்கிலும் ரத்தம் வந்தது. பின்னர் பால்பாண்டியராஜை மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை**</u>

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.09 15:50:59 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 59/2025**

**Prosecution Witness : 5**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : **ஆனந்தபாபு** | **Caste** | : | |
| **Father's Name** | : சுப்பிரமணியன் | **Calling** | : | **சிவில் இன்ஜினியர்** |
| **Village** | : **கம்பிளியம்பட்டி** | **Religion** | : | |
| **Taluk** | : **திண்டுக்கல்** | **Age** | : | **31** |
| | | **Dated** | : | **09.07.2025** |

**09.07.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–6 திரு.**ஆனந்தபாபு** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 5 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் சுக்காம்பட்டியில் குடியிருந்து இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பத்தை நான் கடந்த 19.08.2024 ம் தேதி சுமார் 12.30 மணிக்கு நானும் எனது மாமா திருமலைமுத்து என்பவரும் MLA அலுவலகம் முன்பு கரும்பு ஜீஸ்

கடையில் கரும்பு ஜீஸ் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அந்த இடத்தில் முதல் நடந்த விபத்து சம்மந்தமாக போலிசார் வரைபடம் வரைந்து விசாரித்தார்கள். அப்போது நானும் திருமலைமுத்துவும் சாட்சிகளாக கையொப்பம் செய்து கொடுத்தோம். **(பார்வை மகசர் அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.09 15:51:06 +0530

Judicial Magistrate No.I

Dindigul.